3. அரசினர் தீர்மானங்கள்—(தொடர்ச்சி)

இ. வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

'' தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 18 வது பிரிவின் (2) உட்பிரிவில் ''வகை II பிற உறுப்பினர்கள் '' என்ற தலைப்பின் கீழ் (H) பகுதிக்கிணங்க மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் ஒரு நாளன்று, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் நிர்வாக வாரியத்தில் உறுப்பினராய் இருந்த திரு அ. மொ. பரமசிவம் அவர்களின் பதவிக்காலம் மாநில சட்டமன்றப் பேரவை கலைக்கப்பட்ட தேதியிலிருந்து முடிவடைந்ததால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஓர் உறுப்பினரை இப்பேரவை தேர்ந்தெடுக்க முற்படுமாக '.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒரு மனதாக நிறைவேற்றப்பெற்றது.

2. அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

(ஈ) வேளாண்மை பல்கலைக்கழக வாரியம்—உறுப்பினர் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானத்திற்கிணங்க, வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்கு ஒரு உறுப்பினரை தேர்ந்தெடுப் பதற்கான வேட்பாளர் நியமனத்தாள்களை 27—1—1981 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செய லாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 28—1—1981 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 29—1—1981 வியாழக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பெற வேண்டிய எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 31—1—1981 சனிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் உள்ள குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.